உ

# ஸத்ரு  நிவாரண  ஸ்கந்த ஹோமமும் அதன் பலன்களும்

## *Hindu Temple of Greater Cincinnati*



இந்த ஸ்த்ரு  நிவாரண  ஸ்கந்த ஹோமமானது முருக பெருமானுக்காக  செய்யக் கூடிய ஹோமம் ஆகும். முருகனின் பதினாறு அவதார வடிவங்களை கலசத்தில் ஆவாகனம் செய்து அந்த மூர்த்திக்கு தேவையான ஜபம், ஹொமம், நெய்வேத்தியம், திரவியம் தனித்தனியாக இறைவனுக்கு சமர்ப்பித்து ஒவ்வொரு திரவியத்திலிருந்தும் ஒவ்வொரு விதமான பலன்களைப் பெறலாம்.

மற்றும் இந்த பூவுலகில் அன்றாடவாழ்க்கையில் ஐந்து விதமான ஸத்ருகள்; ஹிதஸத்ரு, அகிதஸத்ரு, க்குரஸத்ரு, குடும்ப ஸத்ரு, அனுகுல்ய ஸத்ரு (உத்யோக ஸத்ரு) ஆகிய ஸத்ருகளிலிருந்து முருகப் பெருமானானவர் பக்தர்களைக் காப்பாற்றுவதற்க்காக இந்த ஸத்ரு  நிவாரண  ஸ்கந்த ஹோமமானது நடைபெற உள்ளது.

கீழ் தரப்பட்ட பதினாறு விதமான பலன்களையும் இந்த ஹோமம் மூலமாக  சின்சினாட்டி பழமுதிர் சோலை முருக பெருமான் நமக்கு அருள் தர இருக்கிறார்.

| மூர்த்தி முருகனின் 16 அவதாரம் | திரவியம் | பலன்கள் |
|---|---|---|
| 1. ஸ்கந்தன் | அரிசி மாவு | கடன் நீங்கும் |
| 2. குகன் | மஞ்சள் பொடி | அரசாங்க வசியம் |
| 3. ஷண்முகன் | வாசனை திரவியம் | பிணி நீங்கும் |
| 4. பாலநேத்திர சுதன் | பஞ்சாமிர்தம் | முக்தி |
| 5. பிரபு | தேன் | சுகம் |
| 6. பிங்களன் | நாட்டு சர்க்கரை | பகைவரை அழிக்கும் |
| 7. சிகீவாகனன் | தயிர் | ஆயுள் விருத்தி |
| 8. கிருத்திக சூனு | பால் | குழந்தை செல்வம் |
| 9. த்வாத ஷாகஷ் | எலுமிச்சை | எம பயம் நீங்கும் |
| 10. பித்ரு புத்ரன் | மாதுவை சாறு | பகைமை தீரும் |
| 11. சக்தி தரன் | கரும்பு சாறு | ஆரோக்கியம் |
| 12. குமாரன் | இளநீர் | ராஜயோகம் |
| 13. க்ரௌஞ்சதாரனன் | வீபூதி | சகல் ஐஷ்வரியம் |
| 14. ஸேநானி | சந்தனம் | பெருஞ் செல்வம் |
| 15. அக்னி ஜன்மன் | சங்கு | சகல பாரிஷ்டம் |
| 16. தாரகஜிதன் | கலசம் | ஞானம் |

அனைவரும் வந்து பங்கு பற்றி இறை அருள் பெறுமாறு

ஆலயத்தின் நிர்வாக சார்பாக கேட்டுக்கொள்கிறோம்!!!

**Siva Sri Muthumeenackshi Sundaram Sivachariar, MA**